**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 216 of 2019

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : கருப்பசாமி

Father's Name : த/பெ.முத்துவேல்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th **day of May** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை இந்திரா நகரில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். சம்பவத்தில் இறந்த பிரகாஷ் எனது மகன். எனது மூத்த மகன் பிரகாஷ் திருமணமாகி அவர் குடும்பத்துடன் கருமத்தம்பட்டியில் வசித்து வந்தார். கடந்த 01.12.2018 வேலை முடித்து அவருடைய வீட்டிற்கு வருவதற்காக அவருடைய இருசக்கர வாகனத்தில் கிழக்காக கணியூர் டோல்கேட் கடந்து வந்து கொண்டிருந்த பொழுது அவர் பின்னால் அதே திசையில் வந்த கார் எனது மகன் இருசக்கர வாகனத்தின் பின்னால் மோதி விட்டதாக அவருடைய நண்பர் எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். மேலும் எனது மகனை ராயல் கேர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்வதாகவும் தகவல் சொன்னார்கள். நான் உடனே புறப்பட்டு மருத்துவமனை சென்று எனது மகனை பார்த்தபோது தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். நான் இது சம்பந்தமாக கருமத்தம்பட்டி காவல் நிலையம்

வந்து எனது மகன் மீது மோதி விபத்து ஏற்படுத்திய நபர் மீது நடவடிக்கை எடுக்க கூறி எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். என்னிடம் கட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் எனது மகன் மேல்சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு எனது மகன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பின்னர் எனது மகனின் பிரேதத்தின் மீது போலீசார் பிரேத விசாரணை மேற்கொண்ட பொழுது உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு விபத்து சம்பந்தமாக தகவல் சொன்ன பொழுது இரவு சுமார் 10.00 மணி இருக்கும். நான் ராயல் கேர் மருத்துவமனை சென்ற பொழுது மணி எவ்வளவு இருக்கும் என்றால் அதிகாலை 2 அல்லது 2:30 மணி இருக்கும். நான் மருத்துவமனை சென்ற பொழுது எனது மகன் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையில் இருந்தார். எனது மகன் தொடர்ந்து நான்கு நாட்கள் ராயல் கேர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து அதன் பின்னிட்டு தான் எனது மகனை கோவை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். 05.12.2018 ஆம் தேதி எனது மகனை கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். அன்றே இரவு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்.

எனக்கு தகவல் சொன்னவரின் பெயர் எனக்கு தெரியாது. ஆனால் எனது மகனின் நண்பர் எனக்கு சொன்னார். எனது மகனை 108 ஆம்புலன்ஸ் மூலமாக யார் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனது மகனின் நண்பர் என சொன்னார் பெயர் தெரியாது. எனது மகனுக்கு மேற்படி நபர் எவ்வாறு நண்பர் என எனக்கு தெரியாது என்றால் அவர் பள்ளியில் படித்ததாக என்னிடம் சொன்னார். எனது மகனின் நண்பர் எனது மகனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்கு சேர்த்ததாக யார் எனக்கு சொன்னார்கள் என்றால் போலீசார் சொன்னார்கள். புகார் அளிக்க நான் எனது தம்பி மற்றும் எனது இளைய மகன் சென்றோம். புகார் காவல் நிலையத்தில் எழுதினோம். யாருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை.

சம்பவத்தில் இறந்த எனது மகனின் அஜாக்கிரதையால் தான் சம்பவ விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness** **(Sd/-T.Arunkumar)**

**Judicial Magistrate**

**Sulur.**